REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE : 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 5] சென்னை: ஆனி 17உ திங்கள் (1—7—57) ★ ★ வெளியீடு: ஆனி 18உ செவ்வாய் (2—7—57) [இதழ் 14

சென்னை 60 வட்டங்களாகப் பிரிக்கப்படும்!

சென்னை, ஜூலை 1—

சென்னை நகரத்தில் தற்போது 50 வட்டங்கள் உள்ளன. அடுத்த ஆண்டு நடைபெற இருக்கும் நகராசபைத் தேர்தலுக்கு முன் மேலும் 10 வட்டங்களை அதிகரித்து 60 வட்டங்களாக மாற்றியமைக்கும் யோசனை சென்னை அரசாங்கத்திற்கு உண்டு என்றும், திருமதி லூர்தம்மாள் சட்டசபையில் தெரிவித்தார்,

மாநிலம் எங்கும் உரிமைப்போர் துவங்கும்

ஜூலை 29: பொது வேலைநிறுத்தம்

'எங்கள் இரத்தத்தை பிறர் உறிஞ்ச அனுமதியோம்'

'டெல்லி மந்திரிகளை வெறுத்து ஒதுக்குவோம்'

அசாம் மக்கள் போர் முரசம்

கௌஹாத்தி, ஜூலை 1—

அசாமில் எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலை நிறுவப்பட வேண்டும் என்பதற்காக மாநிலம் பூராவிலும் ஒரு போராட்ட இயக்கம் நடத்துவது என்று, அகில அசாம் மாநாடு ஒன்றில் முடிவாகியிருக்கிறது.

வரும் ஜூலைத் திங்கள் 29-ந் தேதியன்று, இந்தக் கோரிக்கைக்காக ஒரு பொது வேலைநிறுத்தம்—அர்த்தால் செய்யுமாறும் மாநாடு, அசாம் மக்களைக் கேட்டுக்கொண்டிருக்கிறது.

இந்த மாநாட்டில், மாநிலமெங்கணுமிருந்தும் இருநூற்றுக்கும் அதிகமான பிரதிநிதிகள் கலந்து கொண்டிருக்கின்றனர்.

மக்கள் குரல் வலுக்கிறது!

அசாமில் எண்ணெய்த் தொழிற்சாலை நிறுவ மறுக்கும் டெல்லியின் போக்கிற்கு எதிராக அசாம் மக்களின் கண்டனக் குரல் நாளுக்கு நாள் வலுத்து வருவதாகத் தெரிகிறது.

'டெல்லி மந்திரிகளை வெறுத்து ஒதுக்குவோம்'

கடந்த வாரம் சட்டசபையில் இந்த விவகாரம் குறித்துப் பேசிய பி. சோ. உறுப்பினர் ஒருவர் குறிப்பிட்டதாவது :—

"மத்தியமந்திரிகள் அசாம் வந்த போதெல்லாம் அவர்கள், அசாம் மக்களிடம் தங்களுக்குள்ள அன்பையும், இரக்கத்தையும் தெரிவிக்கத் தவறியதே இல்லை; ஆனால் அவர்கள் அசாமைவிட்டுச் சென்றதும், அசாமை மறந்துவிடுகிறார்கள். எனவே, நான் கருதுகிறேன்—இனி இந்த மத்திய மந்திரிகளை நாம் அழைக்காமலிருக்க வேண்டிய காலம் வந்துவிட்டது. அவர்கள் இங்கு வரவும் வேண்டாம்-வந்து, தங்களின் உதட்டளவு அனுதாபத்தைக் காட்டவும் வேண்டாம்; அசாமின் இயற்கை அழகைப் புகழ்ந்துவிட்டுச் செல்லவும் வேண்டாம்."

மத்திய சர்க்கார் மந்திரிகளைப் பற்றி அசாம் மக்கள் கொண்டுள்ள கருத்தினையே ஹரேஷ்வர் கோஸ்வாமி என்த இந்த பி.சோ. தலைவர் பிரதிபலித்ததாகக் கூறப்படுகிறது.

'நமது இரத்தத்தைப் பிறர் உறிஞ்சுவதா?'

"அசாமில் கிடைக்கும் ஒவ்வொரு சொட்டு எண்ணெயும், அசாம் மக்களின் ஒவ்வொரு துளி இரத்தத்திற்குச் சமமானது என்று கருதுகிறோம்; எனவே, நமது இரத்தத்தைப் பிறர் உறிஞ்சுவதை நாம் அனுமதிக்க முடியாது. அவசியப்பட்டால், இந்த இரத்தத்தில் நாம் நஞ்சு கலந்துவிடுவோம்; பிறர் அதனை அப்போது உறிஞ்ச முடியாதல்லவா?"

என்று, ராம்நாத் சர்மா என்ற அந்தக் காங்கிரஸ் உறுப்பினர் சட்டசபையில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

இந்தக் கடுமையான எச்சரிக்கை, மக்களின் ஆழ்ந்த உணர்ச்சிகளின் வெளிப்பாடு என்றே கருதப்படுகிறது.

சென்னைக்குக் கோதாவரி நீர்

ஆந்திர முதல்வர் கருத்து

சென்னை, ஜூன் 30—

"கோதாவரி நீரை தென்பகுதிக்குத் தருவதில் கஷ்டம் எதும் இருப்பதாகக் கூற முடியாது; சென்னை நகரம் வரை, அல்லது அதற்கும் தெற்கே கூட கோதாவரித் தண்ணீரை கொணர முடியும். இது குறித்த கருத்து, எதிர்காலத்தில்தான் திட்ட உருவத்தைப் பெற முடியும்.

"கோதாவரி நீரைப் பயன்படுத்துவது, தொழில் நுட்பத் திறமையையும், வசதியையும் பொறுத்திருக்கிறது"

என்று ஆந்திர முதன் மந்திரி சஞ்சீவி ரெட்டி கூறியிருக்கிறார்.

ஆர்ப்பாட்டம் நீடிக்குமா?

ஜலந்தர், ஜூன் 30—

பஞ்சாப் 'இந்திரட்சா சமிதி'யினர் இந்தி ஆதிக்கத்திற்கான தங்களின் கிளர்ச்சியினைத் தொடர்ந்து நடத்தப்போவதாக தெரிவித்திருக்கின்றனர்.

நிதி மந்திரியின் ஆணவப் போக்கு

சர்க்கார் ஊழியர்கள் பிரதிநிதியை சந்திக்க மறுத்தாராம்

ஆர்ப்பாட்டம் நடத்தியவர்களை பழிவாங்கச் சதி

பம்பாய், ஜூன் 29—

நிதி மந்திரி கிருஷ்ணமாச்சாரியாரைச் சந்தித்து, மகஜர் கொடுக்க முயற்சித்து, மந்திரி மகஜரைப் பெற்றுக்கொள்ள மறுக்கவே அவரைச் சூழ்ந்து ஆர்ப்பாட்டம் நடத்திய வருமான வரி இலாகா ஊழியர்களில் சுமார் 40 பேர்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க சர்க்கார் உத்தரவிட்டிருக்கிறதாம்.

இவர்கள் அனைவருக்கும் தற்காலிக வேலை நீக்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறதாம்.

இலாகா அதிகாரிகளுடன் பேசுவதற்காக வந்த நிதிமந்திரியிடம், ஊழியர்கள், தங்களின் சம்பள உயர்வு, மற்றும் வேலை நிலை வசதிகளுக்காக ஒரு மகஜர் தருவதற்காக, ஆயிரம் பேர்வரை அலுவலகத்தின் முன் கூடியிருந்தனர்.

வந்த நிதிமந்திரியோ, மகஜரை பெற்றுக்கொள்ளவும், ஊழியர் சங்கப் பிரதிநிதியுடன் ஒரு ஐந்து நிமிடம் பேசவும்கூட மறுத்து விட்டாராம்.

ஊழியர்கள், மந்திரி அதிகாரிகளுடன் பேசிவிட்டுத் திரும்பி வரும்வரை காத்திருந்து, அவர் வந்ததும், ஒலி முழக்கம் எழுப்பி ஆர்ப்பாட்டம் நடத்தியிருக்கின்றனர்.

இதற்காகத்தான், பழிவாங்கும் நோக்குடன் 40 ஊழியர்களை சர்க்கார் வேலையிலிருந்து தற்காலிகமாக நீக்க உத்திரவிட்டிருக்கிறார்களாம்.

ஊழியர்கள், மந்திரியின் இந்த மமதையான போக்கிற்கு எதிராக வேலைநிறுத்தம் செய்வது பற்றி யோசித்துக் கொண்டிருக்கிறார்கள் எனவும் தெரியவருகிறது.

நியாயமான எல்லைப் பகுதி மாற்றங்களுக்கு ஆந்திர முதல்வர் தயாராம்

அவர்களுக்கு நில ஆசை இல்லையாம்; ஆனால் நியாய உணர்வு வேண்டுமாம்

சென்னை, ஜூன் 30—

நியாயமான எல்லைப் பகுதி மாற்றங்களுக்குத் தாம் தயாராக இருப்பதாக ஆந்திர முதன் மந்திரி சஞ்சீவி ரெட்டி கூறியிருக்கிறார்.

"எங்களுக்கு ஒன்றும் பிரதேச ஆசை இல்லை; ஆந்திர மாநிலம் இப்போது, சென்னை மாநிலத்தைப் போல மூன்று பங்கு பெரிதாக இருக்கிறது; எனவே, திருத்தணியைத் தந்து விடுவதினால் எங்களுக்கு ஒன்றும் நஷ்டமில்லை. ஆனால் நியாய உணர்வு வேண்டாமா? திருத்தணி விவகாரத்தை மட்டும் பரிசீலிக்க வேண்டுமென்பது என்ன நியாயம்?"

என்றும் அவர் பத்திரிகையாளரிடம் கேட்டாராம்.

"திருத்தணியைப் பெறுவதினால், சென்னைக்கு ஒன்றும் இலாபமில்லை; இந்த எல்லைப் பிரதேசத் தகராறுகளைவிட நாம் முக்கியமாகக் கவனிக்க வேண்டிய பல பிரச்சினைகளும் இருக்கின்றன" என்றும் அவர் கூறினாராம்.

எஜமானர்களுக்கு தாளம் போடுகிறார் நிதி மந்திரி

அரிசிக்குப் பதில் கோதுமையை ஏற்கவேண்டுமாம்

விலையைக் குறைத்து கோதுமையைப் பிரபலப்படுத்த யோசனை கூறுகிறார்

சென்னை, ஜூன் 30—

அரிசிப் பற்றாக்குறையைப் போக்க டி. டி. கிருஷ்ணமாச்சாரியும், தனது வடநாட்டு எஜமானர்கள் கூறிவரும் யோசனையையே திரும்பவும் கூறியிருக்கிறார்.

அரிசிப் பற்றாக்குறையைச் சமாளிப்பதற்கு, கோதுமையைப் பிரபலப்படுத்த வேண்டுமாம்! கோதுமையை இந்த நாட்டு மக்கள் சாப்பிடுமாறு செய்வதற்கு சர்க்கார் உதவவேண்டுமாம்!

விலை குறைவாக விற்பதன் மூலம் கோதுமையை பிரபலப்படுத்த முடியுமாம்!

கோதுமைக்கு மானியத்தொகை வழங்கி, விலை குறைவாகச் செய்ய முடியுமாம்!

மந்திரி கிருஷ்ணமாச்சாரி, இப்படி பத்திரிகையாளரிடம் தெரிவித்திருக்கிறாராம்.

உணவுப் பற்றாக்குறையைப் போக்க 'நீண்டகால—மற்றும் குறுகியகாலத் திட்டங்களை மேற்கொள்வதுடன், உற்பத்திப் பெருக்கத்திற்கும் வழிசெய்ய வேண்டும் என்றும் அவர் கூறியிருக்கிறார்.

'இராமசாமி படையாச்சி தேர்தல் செல்லாது'

கழகத் தோழர் கிருஷ்ணமூர்த்தி வழக்கு தொடர்ந்துள்ளார்

நெல்லிக்குப்பம் தொகுதியில் வெற்றி பெற்ற முன்னாள் அமைச்சர் இராமசாமி படையாச்சி; தனித் தொகுதியில் வெற்றி பெற்ற தங்கவேல் ஆகிய இருவர்களின் தேர்தலை ஆட்சேபித்து கழக அபேட்சகர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் தேர்தல் கமிஷனிடம் ஆட்சேபனை மனுச் செய்துள்ளார்.

தனித் தொகுதியில் வெற்றி பெற்ற தங்கவேல் அவர்கள் கிறித்துவ மதத்தைச் சார்ந்தவர்; அரசியல் சட்டப்படி அவர் தனித் தொகுதிக்கு நிற்பதற்குத் தகுதியில்லாதவர்; அவர் நின்றதால் தேர்தல் பாதிக்கப்பட்டிருக்கின்றது; மேலும் இராமசாமி படையாட்சி புதுவை உதவி சபாநாயகர் உள்பட ஏராளமான வெளித் தொகுதி ஆட்களை அழைத்து வந்தும், பெருத்த அளவில் இறந்தவர்களின் பேரிலும் ஓட்டுகள் பதிவு செய்ததுடன், சர்க்கார் ஊழியர்களை தன்னுடைய தேர்தலுக்குப் பயன்படுத்தியுள்ளார். ஆகவே, அவர்களிருவரின் தேர்தல் செல்லாது" என்று தோழர் கிருஷ்ணமூர்த்தி தனது ஆட்சேபனை மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

கலை, கைத்தொழில் ஊழியர்கள் ஊதியம்

சட்டசபையில் மந்திரி மழுப்பல்

சென்னை, ஜூலை 1—

1956-ம் ஆண்டு அக்டோபர் 29-ந் தேதியன்று கலை, கைத்தொழில் நுணுக்கப் பள்ளி ஊழியர்கள் தங்கள் நாள் கூலியை மாற்றியமைக்க வேண்டும் என்று கோரி தொழில் அமைச்சரிடம் மனு கொடுத்துள்ளனராம்.

அரசாங்கம் அதைப் பரிசீலித்து வருகிறதென்றும், அவர்களுக்கு மாத ஊதியம் நிர்ணயிப்பது சம்பந்தமாக ஆராய்ந்து வருவதாகவும் சபையில் கூறப்பட்டது.

தேர்தல் [illegible]பூனல் இன்னும் சில தினங்களில் அமைக்கப்படலாம்.

நம் நாடு
தி.மு.க.தினஇதழ் ஆசிரியர் இரா.நெடுஞ்செழியன்
சென்னை 1—7—57 திங்கள்

மதுவிலக்கு!

மது ஒழிப்பை விரும்பாதவர்கள் எவரும் இருக்க முடியாது. மது அருந்தலை ஒரு சமூகப் பழக்கமாகக்கொண்டிருக்கும் மேல்நாட்டவர்கள்கூட, மதுவருந்தலைப் போற்றிப் புகழ்வது கிடையாது. அதுவுமன்றி மது ஒழிப்பை ஆதரிப்பதுடன், அப்பணியில் ஈடுபட்டுப் பணியாற்றுவோரைப் பாராட்டவும் செய்கின்றனர்.

காங்கிரசு ஆளவந்தார்கள் மேற்கொண்டுள்ள செயல்களில் எதாவது பாராட்டுதற்குரியது இருக்கும் பட்சத்தில், அது மதுவிலக்கேயாகும் எனக் குறிப்பிடுவது மிகையாகாது. மதுவிலக்கின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நல்விளைவுகள் முழுதையும் இன்னும் பெற்றுவிடவில்லை. விரைவில் அதன் நற்பயன்களை பொதுமக்கள் பெறுவதும் பெருததும், மதுவிலக்கின் வெற்றிக்கு நாட்டு மக்களிடமிருந்து கிடைக்கக்கூடிய ஒத்துழைப்பின் அளவைப் பொறுத்திருக்கிறது.

மதுவிலக்கின் வெற்றியும் தோல்வியும் மக்களிடமிருந்து கிடைக்கக்கூடிய ஒத்துழைப்பின் அளவைப் பொறுத்திருப்பது போலவே, அவ்வொத்துழைப்பை அரசாங்க அதிகாரிக[ள்] பயன்படுத்த மேற்கொள்[ளு]ம் தன்மையையும் பொறுத்திருக்கின்றது.

மதுவிலக்கில் குறிப்பிட்ட ஒரு வட்டாரத்தில் ஏதாவது குறிப்பிடத் தகுந்த வெற்றி கிடைத்திருக்குமானால், அவ்வட்டார மக்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற ஒத்துழைப்பை, அப்பகுதியில் உள்ள அதிகாரிகள் சிறந்த முறையில் பயன்படுத்திக்கொண்டதே பெரிதும் காரணமாகும். அதேபோன்று தோல்வி பெற்றுள்ள பகுதிகளில், மக்களிடமிருந்து கிடைத்த உதவியை அதிகாரிகள் அலட்சியப்படுத்திவிட்டமையே, அத்தோல்விகளுக்குக் காரணமுமாகும்.

மதுவிலக்கிற்கு இதுவரை கிடைத்து வந்துள்ள தோல்விகளுக்கெல்லாம் மற்றொரு முக்கியமான காரணமும் உண்டு. மதுவிலக்கைச் செயலாற்றி வருகின்ற காங்கிரசு ஆளவந்தார்கள் மதுவிலக்கு விவகாரத்தை, காங்கிரசுக் கட்சியின் சொந்த விவகாரமாகக் கருதி, அதற்கொப்ப நடந்துகொள்வதே அக்காரணம் ஆகும்.

மதுவிலக்கின் வெற்றியை, காங்கிரசுக் கட்சியினரைமட்டும் கொண்டே அடைந்துவிட முடியும் என்று காங்கிரசு ஆளவந்தார்கள் நம்பிக்கொண்டு இருக்கின்றனர். அந்த நம்பிக்கையின் பயனாக, மற்ற அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்கள் தம்மிச்சையாக நல்லெண்ணத்துடன் மதுவிலக்கின் வெற்றிக்கு ஒத்துழைப்பளிக்க முன்வந்த போதிலும், அதை வெறுத்து ஒதுக்க காங்கிரசு ஆளவந்தார்கள் தயங்குவது கிடையாது. ஆளும் கட்சியைச் சார்ந்தவர்கள் அதிகாரிகளிடம் அச்சமின்றி நெருங்கிப் பழகுவதும், அதே போன்று ஆளுங் கட்சியை சார்ந்தவர்களிடம் அதிகாரிகள் சிறிதளவு தாராளமாக நடந்துகொள்ளுவதும் எதிர்பார்க்கக்கூடியதே. இந்த அளவுடன் இரு சாராருடைய உறவு முறை இருந்துவிடுவது கிடையாது. இவ்வுறவுமுறை முற்றிவரும் பட்சத்தில், இதனால் நன்மையைவிட தீமையே மிகுதியான விளைவாகும். இதற்கு எடுத்துக்காட்டாக ஒன்றே ஒன்றை மட்டும் குறிப்பிடுகிறோம்.

மதுவிலக்குக் குற்றத்திற்காக பாதுகாப்பு நிலையத்திற்கு அதிகாரிகளால் அழைத்து வரப்படுகின்றவர்களை, அத்தருணத்தில் மீட்கவும், நிரந்தரமாக வழக்கிலிருந்து அக்குற்றவாளிகள் எனக் கருதப்பட்டவர்களை விடுவிக்கவும் முயற்சிக்கின்றவர்களில் காங்கிரசு கட்சியைச் சார்ந்தவர்களில் பலர் முன்னணியில் உள்ளனர். அதுபோன்றே மற்றொரு அரசியல் கட்சியைச் சார்ந்தவர்களும், காங்கிரசு கட்சியினரைப் பின்பற்றி, மதுவிலக்கிற்குக் கல்லறைக் கட்டுவதை தங்கள் வர்க்க அரசியல் பணியாகக் கொண்டுள்ளனர்.

தங்களுக்குச் சலுகை காட்டுகின்ற அதிகாரிகளின் ஆதரவைக் கொண்டு, தங்களுக்குப் பிடிக்காதவர்களைப் பழிவாங்குவதற்கு, மதுவிலக்குச் சட்டத்தை காங்கிரசுக் கட்சியைச் சார்ந்தவர்கள் தக்கக் கருவியாகப் பயன்படுத்தவும் டுசய்கிறார்கள். இந்தப் மதுவிலக்கு எதிர்பார்த்த அளவு வெற்றி பெறாது, பலவித ஊழல்களுக்கு உற்பத்தி நிலையமாகிவிட்டதில் வியப்பில்லை.

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் சாதனை

திட்டக்குழுவின் மதிப்பீடு

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் துவக்க ஆண்டில் விவசாயப் பொருள் உற்பத்தி 5 கோடி டன்னாக இருந்தது; ஆனால், திட்டத்தின் இறுதி ஆண்டில், 6,49,00,000 டன்னாக அது அதிகரித்திருப்பதாக குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இந்தத் திட்டகாலத்தில் ஆலைத் துணி உற்பத்தி 371·8 கோடி கெசத்திலிருந்து 510·2 கோடி கெசமாக அதிகரித்ததாம்.

திட்டத்தின் முதல் ஆண்டில் சைக்கிள் உற்பத்தி 97,000 ஆகும்; ஆனால் திட்டத்தின் இறுதி ஆண்டில் 5,13,000 சைக்கிள்கள் உற்பத்தி செய்யப்பட்டதாம்.

இந்தத் திடடகாலத்தில், துவக்கப்பள்ளி மாணவக் குழந்தைகளின் எண்ணிக்கை 1·87 கோடியாக இருந்ததாம்; ஆனால் திட்ட இறுதி ஆண்டில் அந்த எண்ணிக்கை 2·48கோடியாக உயர்ந்துவிட்டதாம்.

பட்டதாரி எஞ்சினியர்கள், தொழிற்சாலை பயிற்சியாளர்கள் எண்ணிக்கை திட்டகாலத்தில் 2,200-லிருந்து 3,700 ஆகவும் 'டிப்ளமா'தாரர்கள் எண்ணிக்கை 2,700-லிருந்து 4,000 ஆகவும் அதிகரித்ததாம்.

வரி தராமல் ஏமாற்ற வடநாட்டு வர்த்தகர் கையாளும் தந்திரம்!

'வடவரின் படையெடுப்பால் தென்னக வியாபாரிகட்கு கடைகூட கிடைக்கவில்லை'

மாநில் சர்க்கார் அதிகாரியிடம் சேலம் வியாபாரி முறையீடு

சேலம், சூன் 27—

"வடநாட்டு வியாபாரிகளும், வடநாட்டு வியாபாரிகளின் ஏஜெண்டுகளும் தமிழ் நாட்டில் வந்து குவிவதால் தமிழ் நாட்டில் உள்ள வியாபாரிகளுக்குக் கடைகூட கிடைப்பது கஷ்டமாகிறது,"

என, ஒரு வியாபாரி சென்னை ரெவின்யூ போர்டு மெம்பரும், வர்த்தக இலாகா வரி கமிஷனருமான ஆர். எம். சுந்தரம் ஐ.சி.எஸ். அவர்களிடம் கூறினர்.

சேலத்திற்கு வருகை தந்த அந்த அதிகாரியிடம், சேலம் வியாபாரிகள், விற்பனை வரியால் ஏற்படும் கஷ்டங்கள் பற்றிக் கூறும் மனுக்களைத் தந்தனர்.

திரு. கோவிந்தராசன் என்ற வியாபாரி குறிப்பிட்டதாவது:—

"ஒரு மாகாணத்திலிருந்து மற்றொரு மாகாணத்திற்குப் பொருள்களைக் கொண்டுசென்ருல் மாகாணத்திற்கு மாகாணம் வரி விதிக்கப்படுகிறது. ஆனால் வடநாட்டு வியாபாரிகளோ, சேலம், மற்றும் தமிழ்நாட்டில் உள்ள பல இடங்களிலும் தங்கள் கிளைக் காரியாலயங்களைத் திறந்து, பொருள்களை வடநாட்டிலிருந்து கிளைக் காரியாலயங்களுக்கு அனுப்புவதாகக்காட்டி, ஒரு மாகாணத்திலிருந்து மற்றொரு மாகாணத்திற்குக் கொண்டு செல்லும் பொருள்களுக்கு விதிக்கப்படும் வரிகளிலிருந்து தப்பித்துக்கொள்கிருர்கள். வடநாட்டிலிருந்து வாங்கும் பொருள்களுக்கு தமிழ் நாட்டு வியாபாரிகள் வரி கட்ட வேண்டியுள்ளது. வடநாட்டு வியாபாரிகள் தமிழ் நாட்டில் பல ஊர்களில் வந்து குவிந்துவிடுவதால் உள்ளூர் வியாபாரிகளுக்குக் கடைகூட கிடைப்பது கஷ்டமாகிறது."

ஆர். எம். சுந்தரம் ஐ.சி.எஸ். பதிலளிக்கையில் குறிப்பிட்டதாவது:—

"வடநாட்டு வியாபாரிகள்—தென்னாட்டு வியாபாரிகள் என்று பாகுபாடு காண்பிக்கவேண்டாம்; எல்லோரும் இந்நாட்டு வியாபாரிகள்தான். ஆனால், எல்லோருக்கும் சமமாக வரி விதிக்கவேண்டியதுதான்.

"விற்பனை வரியிலுள்ள கஷ்டங்களைப் பற்றி எடுத்துக்கூறப்பட்டது. சென்னை சர்க்காருக்கு முக்கிய வருமானமாக இருப்பது விற்பனை வரிதான். விற்பனை வரியின் மூலம் ஆண்டு ஒன்றுக்கு சுமார் ரூ 10 கோடி வருமானம் கிடைக்கிறது. அதற்கு அடுத்தபடியாக நிலவருமானம் ஆண்டு ஒன்றிற்கு ரூ. 6 கோடி கிடைக்கிறது. ஆனால் விற்பனை வரி வசூலிக்கும் அதிகாரிகள், வியாபாரிகளிடம் கண்ணியமாக நடந்துகொள்ளவேண்டும். வியாபாரிகளை மரியாதையாக நடத்துமாறு வரி வசூலிக்கும் அதிகாரிகளுக்கு சொல்லி இருக்கிறேன். வியாபாரம் நன்றாக நடந்தால் தான் சர்க்காருக்கு தொடர்ந்து வரி கிடைக்கும்.

"வரி சம்பந்தப்பட்ட சட்டங்களையும், மற்றவைகளையும் பரிசீலனை செய்து அறிக்கை சமர்ப்பிக்க லோகநாதன் என்ற அதிகாரியை சர்க்கார் நியமித்து இருக்கிறார்கள். அவர் பரிசீலனை செய்து அறிக்கை சமர்ப்பிப்பார்." (ந. நி.)

கூவம், பக்கிங்காம் கால்வாய் அபிவிருத்தி

'இப்போது இல்லை' என்கிறது சர்க்கார்

சாக்கடை நீர் கொட்டுவதை நிறுத்தினுல் யோசிப்பார்களாம்

சென்னை, சூன் 28—

'கூவம், மற்றும் பக்கிங்காம் கால்வாய் என்ற நகரத்தின் எல்லைக்குள் உள்ள இரண்டு கால்வாய்களையும் அபிவிருத்தி செய்யும் நோக்கம் இப்போது சர்க்காருக்கு இல்லை' என்று, நகரசபைக்கு சர்க்கார் தெரிவித்திருக்கிறதாம்!

'இந்த நீரோடைகளில் நகரசபையினர், சாக்கடை மற்றும் கழிவுநீரைக் கொட்டுவதை நிறுத்தினால்தான் இவற்றை அபிவிருத்தி செய்வதுபற்றி யோசிக்க முடியும்' என்ற பிரதம ,எஞ்சினீயரின் கருத்தினை, நகரசபைக்கு சர்க்கார் தெரிவித்திருக்கிறதாம்!

1955-56-ல் வருமான அதிகரிப்பு வெறும் பெயரளவில் இருந்ததாம்

பருவ மழையை நம்பியுள்ள நாட்டின் வருமானம் ஏற்றத் தாழ்வாகவே இருக்குமாம்

தொழில் துறையில் போடப்பட்ட முதலீட்டுக்கு பலன் கிடைக்க சில ஆண்டுகள் ஆகுமாம்

"முதல் ஐந்தாண்டுத் திட்டகாலப் பொதுப்படை பலாபலன்களை கணித்துப் பார்க்குமிடத்து, தேசிய வருமானம் 17·5 சதவிகிதம் அதிகரித்துள்ளது. இந்த அதிகரிப்பு ஒட்டுமொத்தத்தில் திருப்தி அளிப்பதாக இருந்தாலும், இது ஒரே திட்டமாகத் தொடர்ந்து ஏற்படவில்லை,"

என்று, முதல் ஐந்தாண்டுத் திட்டம் பற்றிய திட்டக் குழுவின் மதிப்பீட்டு அறிக்கையில் குறிபபிடப்பட்டிருக்கிறது.

1953-54, 1954-55-ம் ஆண்டுகளில் இந்த வருமானம் பெரும் அளவுக்கு அதிகரித்துள்ளது. இதற்கு முக்கியக் காரணம் விவசாயப் பொருள் உற்பத்தி அதிகரிப்பே ஆகும். இவ்வகையாக 3-ம் ஆண்டு கடைசியில் தேசிய வருமானம் 13 சதம் அதிகரித்தது.

ஆனால் இதை அடுத்த இரண்டு ஆண்டுகளில் வருமான அதிகரிப்பு விகிதம் குறைந்துவந்தது. 1955-56 வருமான அதிகரிப்பு வெறும் பெயரளவில்தான் இருந்தது.

இந்தத் திட்டகாலத்துக்கு சராசரி வருமானம் 10 5 சதவிகிதம் அதிகரித்துள்ளது. ஆயினும் இறுதி ஆண்டில், பொருள்கள் செலவாவது 8 சதவிகிதத்துக்கு மேல் அதிகரிக்கவில்லை.

அபிவிருத்தி வேலைகள் ஏராளமாகச் செய்யப்பட்டிருப்பதையும், திட்டகாலத்தில் இரண்டு ஆண்டுகளில் செய்யப்பட்டுள்ள செலவுகளையும் கவனிக்குமிடத்து மொத்த முதலீடுக்கும், மொத்த உற்பத்திக்கும் நேரடி சம்பந்தம் ஏற்படுத்துவதற்கு இயலாததாக இருக்கிறது. பருவ மழையை நம்பி நிற்கும் விவசாய நாட்டின் தேசிய வருமானம் ஆண்டுக்கு ஆண்டு ஏற்றத்தாழ்வடையாமல் இருக்க முடியாது.

மற்றும் தொழிற்சாலைகள் அமைப்பதற்கும் அவைகள் வேலை செய்யத் துவங்குவதற்குமிடையே சில ஆண்டுகள் கழிந்தால் இத்துறையில் செய்யப்பட்ட முதலீடு பணத்துக்கு சில ஆண்டுகள் கழித்துத்தான் பலன் கிடைக்கும்.

பம்பாய் சட்டசபையில் எதிர்க் கட்சியினர் இரண்டாம் முறையாக வெளிநடப்பு

துப்பாக்கிப் பிரயோகங்கள் பற்றி விசாரணை நடத்த சர்க்கார் மறுப்பு

பம்பாய், சூன் 28—

'பம்பாயில், மொழிவழி மாநிலப் போராட்டத்தின்போது நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகங்கள் குறித்து நீதிபூர்வ விசாரணை நடத்த வேண்டும்' என்று எதிர்க்கட்சியினர் பம்பாய் சட்ட சபையில் தீர்மானம் கோண்டுவந்தனர்.

'இது குறித்து விவாதிப்பதா வேண்டாமா?' என்பதற்காக வாக்கெடுப்பு நடத்த சபைத் தலைவர் மறுத்ததால், எதிர்க்கட்சியினர் அனைவரும் வெளிநடப்புச் செய்தனர்.

சபை, எதிர்க் கட்சியினர் எவருமே இல்லாமல் தீர்மானத்தை நிராகரித்திருக்கிறது.

பம்பாய் சட்ட சபையில் எதிர்க் கட்சியினர் வெளிநடப்பு செய்வது, இந்தக் கூட்டத் தொடரில் இரண்டாவது தடவையாகும்.

வில்லாளன் வெற்றி

தோழர் தில்லை - வில்லாளன் அவர்கள் சட்டப் படிப்பில் F. L. தேர்வில் வெற்றி பெற்றுள்ளார்.

‘சட்டத்தின் மூலம் விவசாயிகளுக்கு நன்மை செய்யுங்கள்’

அரசாங்கத்தின் கடமையை சுட்டிக் காட்டுகிறார் ஏ. கோவிந்தசாமி

சென்னை, ஜூன் 28—

‘சென்னை மாநிலத்தில் பல்வேறு பகுதிகளில் உள்ள மின்சார விநியோக நிறுவனங்களை சென்னை மாநில அரசாங்கம் ஏற்று நடத்துவதற்கு அதிகாரம் இல்லை’ என்று, 1954-ம் ஆண்டு ஏப்ரல் திங்களில் இந்திய சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு கூறிவிட்டதை அடிப்படையாகக்கொண்டு, சென்னை அரசாங்கம் தொடர்ந்து முயற்சி செய்து, அரசியல் சட்டத்தில் திருத்தம் ஏற்படுத்தி, இப்போது சென்னை மாநிலத்தில் உள்ள மின்சார விநியோக நிறுவனங்களை ஏற்று நடத்த முன்வந்துள்ளது.

இதற்கான சட்டத்தை மின்சார இலாகா அமைச்சர் திரு. இராமய்யா இன்று சட்டசபையில் கொண்டுவந்து உறுப்பினர்களின் ஆதரவைக் கோரினார்.

இந்தச் சட்டத்தை வரவேற்று சபை ஆதரவளித்தது.

சட்டத்தை வரவேற்றுப் பேசுகையில் தோழர் ஏ. கோவிந்தசாமி, தனது தொகுதி கடந்த 5 ஆண்டுகளில் சரிவர கவனிக்கப்படவில்லை என்றார்.

மின்சார வசதிக்காக ஏழை விவசாயிகள் பெரிய தொகையை முன்பணமாகக் கட்டி மனுச் செய்துகொண்டும் பலன்பெற முடியவில்லை என்பதைச் சுட்டிக்காட்டினார். இதனால் பல்வேறு கிராமங்களில் விவசாயிகளின் உற்சாகம் குன்றியதோடு, மனுக்களை அரசாங்கம் கவனிப்பதில் தாமதம் ஏற்படுவதால் உற்பத்தியும் குறைய வேண்டிய நிலையும் ஏற்பட்டதாகக் குறிப்பிட்டார்.

இந்தச் சட்டம் அமுல் செய்யப்படுவதன் மூலம், விவசாயிகளுக்கு எதிர்பார்த்த நன்மை ஏற்படும் என்று நான் நம்புகிறேன்’ என்றார்.

“விவசாயிகளுக்கு அனுகூலமான முறையில் மின்சார வசதியும், விஸ்தரிப்பும், கட்டணமும் இருந்துவர வேண்டும்; சமீபத்தில் நிறுவப்பட்டுள்ள ‘மின்சார நிறுவனம்’ தான் ஏற்றுக்கொண்டுள்ள பொறுப்பை உணர்ந்து செயலாற்றும் போது மின்சார விநியோகத்தில் மக்களுக்கு ஏற்பட்டுள்ள—ஏற்பட்டு வருகிற குறைபாடுகளை அகற்ற முயல வேண்டும். இத்தகைய நிறுவனத்தில், திரு. பி. டி. இராசன் போன்ற அனுபவம் வாய்ந்த மின்சார விநியோக நிறுவனத்தின் பிரதிநிதிகளையும் சேர்த்துக்கொள்ள வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்”

என்றுகூறி, மின்சார விநியோக நிறுவனங்களில் பணியாற்றும் ஊழியர்களின் குறைகளை எடுத்துரைத்து, அவர்களுடைய நியாயமான குறைகளைக் களைந்தெறிய வேண்டும் — என்று கேட்டுக்கொண்டார்.

‘தமிழ் ஆட்சிமொழியாகும் நிலைமையில் தாமதமேன்?

குழுவின் சிபாரிசுகளில் தாமதமாம்

சென்னை, ஜூன் 28—

‘ஆட்சி மொழியாக தமிழ் ஆக்கப்படுவதற்கு நியமிக்கப்பட்ட குழுவின் முடிவுகள் யாவை?” என்று சட்டசபையில் கல்வி அமைச்சரை கேட்டதற்கு, ‘குழுவின் ஆலோசனைகள் இன்னும் ஆரம்பக்கட்டத்தில்தான் உள்ளது; இறுதி சிபாரிசுகள் இன்னும் தரப்படவில்லை; குழு செய்யும் சிபாரிசுகளை அமுல் நடத்துவதற்கான வசதிகளை அரசாங்கம் மேற்கொண்டுள்ளது’ என்று, அமைச்சர் சுப்பிரமணியம் பதிலளித்துள்ளார்.

“தாலுகா அலுவலகங்களில் இப்போது தமிழில்தான் நிர்வாகம் நடத்தப்பட்டுவருகிறது; மாவட்ட ஆட்சிமன்ற நிர்வாகம் தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் நடைபெற்று வருகிறது; தமிழிலேயே நிர்வாகம் நடத்தவேண்டும் என்று உத்திரவு பிறப்பிக்க இப்போது சூழ்நிலை சரியில்லை; போதிய தமிழ் ‘டைப்’ அடிப்பவர்கள் இல்லை; ஆங்கில வார்த்தைகளுக்குச் சரியான நல்ல தமிழ்ச் சொற்கள் ஆராயப்பட்டு வருகிறது; ஏற்கனவே உள்ள சட்டங்கள் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு வருகின்றன; இன்னும் சிறிது காலத்திற்கு சட்டங்கள் ஆங்கிலத்திலேயே தயாரிக்கப்படும்; இந்த நிலையில் எப்போது ‘தமிழ்’ ஆட்சிமொழியாக்கப்படும் என்று கால் வரையறை நிர்ணயித்துக் கூற முடியாது; நிர்வாகத் தமிழ்ச் சொற்கள் எல்லோருக்கும் புரியக்கூடிய எளிய தமிழ்ச்சொற்களாக இருக்கும்; தமிழ் மொழியை சென்னை மாநிலத்தில் எல்லோரும் படித்தாகவேண்டும்; குழுவின் சிபாரிசுகளின்படி பள்ளிகளில் முதல் மொழி தமிழ்; இரண்டாவது மொழி ‘இந்திய மொழி’; மூன்றாவது மொழி ஆங்கிலம் அல்லது பிரதேச மொழி என்று அமுல் செய்யப்பட்டவுடன் கட்டாயமாகத் தமிழ் கற்கவேண்டிய நிலை ஏற்படும்” என்று, கேட்கப்பட்ட பல துணைக் கேள்விகளுக்கு பதிலளிக்கும் போது அமைச்சர் சுப்பிரமணியம் சட்டசபையில் தெரிவித்தார்.

பிற மாநில விசைத்தறித் துணிகள்

கைத்தறித் துணிகளுக்குப் போட்டியாகுமாம்

சட்டசபையில் மந்திரி தரும் விளக்கம்

சென்னை, ஜூன் 28—

“விசைத்தறி அமைத்துக் கொள்ள இதுவரை எவருக்கும் அனுமதி தரப்படவில்லை” என்று, தொழில் மந்திரி வெங்கட்ராமன், சட்டசபை கேள்வி நேரத்தில் தெரிவித்திருக்கிறார்.

பஞ்சு நூல் அல்லாமல், பட்டு நூல் முதலியவை உபயோகிப்பதானல் விசைத்தறிகளை அனுமதிக்கலாம் என்று சர்க்கார் முடிவு செய்திருப்பதாகவும் மந்திரி கூறியிருக்கிறார்.

இப்போதுள்ள சூழ்நிலைக்கொப்பவே சர்க்கார் இந்த முடிவைச் செய்திருப்பதாகவும் மந்திரி கூறியிருக்கிறார்.

“இதர மாநில சர்க்கார்கள், விசைத்தறிக்கு தாராளமான அனுமதி தருகிறார்கள்; இந்தத் தறிகளில் உற்பத்தியாகும் துணி நமது மாநிலத்திற்கு வந்து நமது கைத்தறித் துணிகளுடன் போட்டியிடும் காலம் வரலாம்; அப்போது நாம், இந்த விவகாரம் குறித்து மீண்டும் பரிசீலனை செய்யவேண்டி வரும்” என்றும் கூறியிருக்கிறார், மந்திரி.

மாயூரம் தொகுதி தேர்தல் வழக்கு

நாகை, ஜூன் 28—

இன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட மாயூரம்தொகுதி தேர்தல் வழக்கு மீண்டும் ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது.

13—7—57 சனியன்று இரு தரப்பு வாதங்களும் நடைபெறுமென்றும், அன்றோடு வழக்கும் முடிவடையலாமென்றும் தெரிய வருகிறது.

கழகத் தோழர் குடவாசல் சி. கிருட்டினமூர்த்தியின் சார்பில் நாகை வழக்கறிஞர் கே. இராசகோபாலன் ஆசரானர்.

இந்திய சர்க்கார் எதிர்வழக்காடுவர்

புதுடில்லி, ஜூன் 28—

பத்திரிகையாளர் சட்டம், சம்பளப் போர்டின் முடிவு ஆகியவற்றை எதிர்த்து இந்திய உயர் நீதிமன்றத்தில் ஆட்சேபனை மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது; இவற்றை எதிர்த்து இந்திய சர்க்கார் தரப்பில் எதிர்வழக்காடுவதற்கு அட்டர்னி-ஜெனரல் எம். சி. செதல்வாடை இந்திய சர்க்கார் கேட்டுக்கொண்டிருக்கிறதாம்.

கழகச் செய்திகள்

நத்தம்:

23—5—57ல், அழகிரி திடலில் தோழர் எம். எம். மீரான் தலைமையில், கழகச் சார்பில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது; தோழர்கள் கே. எஸ். சந்தானம், பி. சமதர்மம் ஆகியோர் பேசியபின், தோழர் க. அன்பழகன் எம்.எல்.ஏ. அவர்கள் விரிவுரையாற்றினர்.

மண்ணச்சநல்லூர்:

24—3—57ல் இவ்வூரில் தி.மு. கழகம் அமைக்கப்பட்டு, தோழர்கள் செயலாளர்: பு. ரெ. மாரிமுத்து; துணைச்செயலாளர்: வி. எஸ். பெரியசாமி; பொருளாளர் ரெ. தங்கராசு; மாவட்டப் பிரதிநிதியாக மு. கிருஷ்ணன்; 15 பேர் செயற்குழு உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

மேலப்பாளையம்:

24—5—57ல், ஜின்னு திடலில், தோழர் வி. இ. என் மீரான் அவர்கள் தலைமையில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது; தோழர்கள் கே. ஒ. எச் காஜா, டபின்யூ. டி. துரைசாமி, ஏர்வாடி அப்துல் காதர், செ. கா. மு. யூசுப் ஆகியோர் பேசியபின், தோழியர் சத்தியவாணி முத்து, எம். எல். ஏ. அவர்கள் விரிவுரையாற்றினர்; இறுதியில் வழக்கறிஞர் எஸ். இரத்தினவேல் பாண்டியன் பேசியபின் தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டன.

அருப்புக்கோட்டை:

26—5—57 மாலை 5 மணிக்கு, நகர தி. மு. கழகச் சார்பில், தோழர் சிவ. சண்முகசுந்தரனார் தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தோழர்கள் க. அன்பழகன், எம். எஸ். இராமசாமி ஆகியோர் தற்கால அரசியல் நிலை குறித்து விளக்கவுரையாற்றினர். பொதுக்கூட்டத்திற்கு முன்னர், நகர நாடார் உயர்நிலைப் பள்ளி பழைய மாணவர்கள் சங்க ஆண்டு விழாவிலும் தோழர் அன்பழகன் அவர்கள் கலந்துகொண்டார். தோழர் அன்பழகன் அவர்கட்கு பல கிளைக் கழகங்கள், மன்றங்கள் சார்பில் மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டன.

நீடாமங்கலம்:

27—5—57 இரவு 9 மணிக்கு தோழர் ஜி. இராமானுசம் இல்லத்தில் தோழர் ஜே. இராமதாஸ் தலைமையில் நடைபெற்ற உறுப்பினர் கூட்டத்தில், செயலாளர் தோழர் சுப்பிரமணியன் விலகலை ஏற்றுக்கொண்டும், தோழர் ஜி. இராமானுசம் அவர்களை தற்காலிகச் செயலாளராகத் தேர்ந்தெடுத்தும், மற்றும் பல முக்கிய முடிவுகளும் மேற்கொள்ளப்பட்டன.

பெருஞ்சேரி:

27—5—57 மாலை 6 மணிக்கு மாயூரம் வட்டம் பெருஞ்சேரியில் தோழர் பி. வெங்கடகிருஷ்ணன் தலைமையில் தி. மு. கழகக் கிளைத் துவக்க விழா நடைபெற்றது. தோழர் என். கிட்டப்பா சிறிது நேரம் பேசியபின், பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் கிளைக் கழகத்தை துவக்கிவைத்து கழகக் கொள்கைகளை விவரித்து அரியதோர் பேருரை நிகழ்த்தினர்.

தாத்தையங்கார்பேட்டை:

29—5—57ல், இவ்வூர் சந்தை மைதானத்தில் தோழர் இ. பரசுராமன் தலைமையில் கிளைக் கழகச் சார்பில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் ஏ. துரைராஜ், அழகமுத்து ஆகியோர் சொற்பொழிவாற்றியபின், அண்ணா அவர்கள் நீண்டதோர் கருத்துரை வழங்கினார்கள். பல்லாயிரக்கணக்கான மக்கள் கூடியிருந்து கொள்கை விளக்கம் பெற்றனர்.

கொப்பம்பட்டி:

28—5—57 இரவு 11 மணிக்கு கொப்பம்பட்டியில் தோழர் என். அரங்கசாமி தலைமையில் நடைபெற்ற கிளைக் கழகப் பொதுக்கூட்டத்தில் அண்ணா அவர்கள் கலந்துகொண்டார்கள். அண்ணா அவர்கட்குப் பல கிளைக் கழகங்கள் சார்பில் மலர் மாலைகளும் கைத்தறி ஆடைகளும் அணிவிக்கப்பட்டன. சேலம் தொகுதித் தேர்தல் வழக்கு நிதிக்காக அண்ணா அவர்களிடம் நிதி வழங்கப்பட்டது. ‘நம் நாடு’ இதழ் வளர்ச்சிக்காக, ‘தென்றல்’ ஒலி பெருக்கி நிலையத்தார் ரூ. 1 அன்பளிப்பு தந்தனர்.

சிறுநாவலூர்:

28—5—57 இரவு 7½ மணியளவில் திருச்சி மாவட்டம் சிறுநாவலூரில் அம்பேத்கார் நூல் நிலையம் இணைக்கப்பட்ட தி. மு. கழகக் கிளையின் துவக்க விழா, கல் நாட்டு விழா, கொடியேற்று விழாக்களில் அண்ணா அவர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள். பின்னர் கிளைக் கழக நிர்வாகிகள் தேர்வும் நடைபெற்றது. செயலாளர்: என். பெருமாள்; துணைச்செயலாளர்: பா. பெரியண்ணன்; பொருளாளர்: சு. ந. துரைசாமி; மாவட்டப் பிரதிநிதி: கா. நாராயணசாமி.

விருதுநகர்:

28—5—57 இரவு 7 மணிக்கு. விருதுநகர் மேலரத வீதியில் தோழர் ஜி. ஆறுமுகம் தலைமையில் தோழியர் சத்தியவாணி முத்து அவர்கள் கழகக்கொடியை ஏற்றிவைத்தார்கள். இரவு 8-மணிக்கு அம்மன்கோவில் பொட்டலில் தோழர் கே. சுப்பிரமணியன் தலைமையில் நடைபெற்றப் பொதுக்கூட்டத்தில் தோழர்கள் பாஸ்கரன், இரத்தினம் ஆகியோர் பேசியபின் தோழியர் சத்தியவாணிமுத்து அவர்கள் கழகக் கொள்கைகளை விளக்கிச் சொற்பொழிவாற்றினர். தோழியர் சத்தியவாணிமுத்து அவர்கட்குப் பல கிளைக் கழகங்கள், மன்றங்கள் படிப்பகங்கள் சார்பில் மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டன.

அம்மன்பேட்டை:

28—5—57 மாலை 5 மணிக்கு. தோழர் ஏ. வி. பதி தலைமையிலும், தோழர் துரை. வையாபுரி முன்னிலையிலும் நடைபெற்ற அம்மன்பேட்டை தி. மு. கழக அமைப்புக் கூட்டத்தில், தோழர்கள் மீ. சண்முகவேல், எஸ். தியாகராசன், எஸ். ஏகாம்பரம் ஆகியோர் முறையே செயலாளர் துணைச் செயலாளர், பொருளாளராகவும், தோழர்கள் அ. வெங்கிடாசலம், ஏ. பி. நாராயணசாமி ஆகியோர் மாவட்டப் பிரதிநிதிகளாகவும் மற்றும் 16 பேர் செயற்குழுவினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

மேட்டுப்பாளையம்:

28—5—57 இரவு 8 மணிக்கு அக்கிராய பாளையத்தை அடுத்த மேட்டுப்பாளையத்தில் தோழர் எம். இராமசாமி தலைமையில் தி. மு. கழகக் கிளை துவக்கப்பட்டு நிர்வாகிகளும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். செயலாளர்: எம். நடேசன்; துணைச்செயலாளர்: ஆர். சின்னசாமி; பொருளாளர், எஸ். மாரிமுத்து; மாவட்டப் பிரதிநிதி: எம். வேலாயுதம்; மற்றும் 11 செயற்குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

சாத்தன்குளம்:

28—5—57 இரவு 7 மணிக்கு, இவ்வூர் காந்தி மைதானத்தில் தோழர் தா. ஜான்டேவிட் தலைமையில் நடைபெற்ற தி. மு. கழகப் பொதுக்கூட்டத்தில் தோழர்கள் க. அன்பழகன்; கா. அமீது; இரா. நல்லினவேல் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். தோழர் அன்பழகன் அவர்கட்குப் பல கிளைக் கழகச் சார்பில் கைத்தறி ஆடைகள் அணிவிக்கப்பட்டன. இறுதியில் வரிக் கொடுமைகளைக் கண்டித்துத் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

திருப்பத்தூர்:

28—5—57 மாலை 6 மணிக்கு, மன்சா வட்டம் திருப்பத்தூரில் தோழர் சிவபுன்னி தலைமையில் தி. மு. க. துவக்கவிழாப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் சி. பி. சிற்றரசு, ப. நாராயணசாமி, வ. மோகன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

கட்டக்குடி:

29—5—57 மாலை 6 மணிக்கு மன்னை வட்டம் கட்டக்குடியில் தோழர் இரா. கணேசன் தலைமையில் தி. மு. கழகக் கிளைத் துவக்க விழாக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் என். எஸ். இளங்கோ, நாராயணசாமி ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

அய்யனுபுரம்:

29—5—57-ல், இராமநாதபுரம் மாவட்டம் அய்யனுபுரத்தில் தோழர் இ. ல. ம. சௌந்திர பாண்டியன் தலைமையில் கிளைக் கழக அமைப்புக் கூட்டம் நடைபெற்றது. கோழர்கள் ப. பழனிச்சாமி, கா. வேலுச்சாமி, வே. சண்முகம், இரா. இலட்சமணன் ஆகியோர் முறையே செயலாளர், துணைச செயலாளர், பொருளாளர், மாவட்டப் பிரதிநிதியாகவும் மற்றும் 7 பேர் செயற்குழு உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

காளாஞ்சிமேடு:

1—6—57 இரவு 7 மணிக்கு, மன்னை வட்டம் காளாஞ்சிமேட்டில் தி. மு. கழகத் துவக்க விழா நடைபெற்றது. தோழர்கள் டி. கே. சீனிவாசன், பாலகிருட்டினன், கி. வ. துரைஅரசன், பி. எஸ். பி. சாமி ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

இராசகோபால்புரம்:

2—6—57 மாலை 6 மணிக்கு மேற்படியூரில் தி. மு. கழகக் கிளைத் துவக்க விழா நடைபெற்றது. தோழர்கள் கி. வ. துரை அரசன், பி. எஸ். பி. சாமி, இரா. கணேசன், பாண்டியன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

செருமங்கலம்:

3—6—57 மாலை 6 மணிக்கு மேற்படியூரில் தி. மு. கழகக் கிளை துவக்க விழா—கட்டிடத் திறப்பு விழா தோழர் சீ. கோவிந்தராசன் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் டி. கே. சீனிவாசன், நாராயணசாமி, பி. எஸ். பி. சாமி, பாலகிருட்டினன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

சென்னை சட்டசபையில் கேள்வி நேரம் :

தமிழருக்கு எதிராக படாஸ்கர் தீர்ப்பு இருக்குமானால்....!

சென்னை அரசாங்கம் ஏற்க மறுக்குமா ?

க. அன்பழகன் கேள்வி நிராகரிப்பு

சென்னை, ஜுன் 29—

சென்னை—ஆந்திர எல்லைத் தகராறைத் தீர்ப்பதற்கு மத்திய சர்க்காரால் நியமிக்கப்பட்ட எச். வி. படாஸ்கரின் தீர்ப்பு எந்த நேரத்திலும் வெளிவருமென எதிர்பார்க்கப்படுகிறதல்லவா?

இது பற்றி எழுப்பப்பட்ட கேள்விகளின்போது, தோழர் க. அன்பழகன் அவர்கள், படாஸ்கரின் தீர்ப்பு தமிழருக்குத் தவறு இழைக்கும் வகையில் இருக்குமானால் சென்னை அரசாங்கம் அந்தத் தீர்ப்பை ஏற்க மறுக்குமா? என்று கேட்டார்.

சபைத் தலைவர் குறுக்கிட்டு, கேள்வியை நிராகரித்தார்.

சென்னை அரசாங்கம் வற்புறுத்தியது என்ன ?

எல்லைத் தகராறு பற்றி சென்னை அரசாங்கம் சென்ற ஆண்டு டிசம்பர் திங்களில் படாஸ்கரிடம் மகசர் தந்துள்ளது என்றும், தீர்ப்பு விரைவில் வெளியாகும் என்றும் நிதி அமைச்சர் தெரிவித்தார்.

படாஸ்கரின் தீர்ப்புஎப்படியிருப்பினும் சென்னை அரசாங்கம் ஏற்றுக்கொள்ள சம்மதித்துள்ளதாம். இதற்குக் காரணம், நியாயம் சென்னை பக்கம் உள்ளது என்ற நம்பிக்கைதானும்! குறிப்பாக, 'ஒசூர் பகுதி மீது ஆந்திரத்திற்கு எந்தவித உரிமையும் இல்லை என்பது சென்னை அரசாங்கத்தின் கருத்தாகும்,' என்று அமைச்சர் கூறினர்.

படாஸ்கரின் தீர்ப்பு எப்போது வெளியாகும் என்பதற்கு எழுத்து மூலம் எந்தவிதத் தகவலும் இல்லையாம்.

'தமிழ்ப் பேசும் மக்கள் பெருவாரியாக உள்ள பகுதிகளை சென்னை மாநிலத்துடன் சேர்க்க வேண்டும்,' என்ற அடிப்படையில் படாஸ்கரிடம் சென்னை வற்புறுத்தியுள்ளதாம்.

1951-ல் எடுக்கப்பட்ட மக்கள் எண்ணிக்கையைக் கொண்டே இது குறித்து முடிவு செய்யப்படும் என்றும், மீண்டும் இப்போது மக்கள் எண்ணிக்கை கணக்கிடப்படமாட்டாது என்றும் அமைச்சர் கூறினர்.

'படாஸ்கரின் தீர்ப்பு வெறும் சிபாரிசுதான்—சென்னை அரசாங்கத்தைக் கட்டுப்படுத்துவதல்ல; ஆனல், அவருடைய தீர்ப்பை ஏற்க சென்னை அரசாங்கம் சம்மதித்துள்ளது,' என்றும் கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் நிதி அமைச்சர் தெரிவித்தார்.

★

என். ஜி. ஓ.-வினர் குறைகள் ஏற்கனவே தெரியுமாம் !

குழு ஒன்றை அமைக்க அவசியமில்லையாம்!

சென்னை, ஜுன் 30—

1957-ம் ஆண்டில் சென்னை மாநில என்.ஜி.ஓ.-க்களிடமிருந்து அரசாங்கத்திற்கு தூதுக்குழு எதுவும் வரவில்லையென்றும், அரசாங்கத்திற்கு ஏற்கனவே அவர்களின் குறைகள் நன்கு தெரியுமென்றும் நிதி அமைச்சர் சுப்பிரமணியம் தெரிவித்தார்.

'அவர்கள் குறையைப் பற்றி ஆராய ஒரு குழுவை அமைக்கும் யோசனை உண்டா ?' என்று கேட்கப்பட்டபோது, நிதி அமைச்சர், 'அத்தகைய அவசியம் இல்லை' என்று திட்டவட்டமாக அறிவித்ததுடன், 'அவர்களின் குறைகளை எப்படி நிவர்த்தி செய்வது என்பதே சென்னைக்கு இப்போதுள்ள பிரச்சினையாகும்' என்று குறிப்பிட்டார்.

சப் - இன்ஸ்பெக்டர்கட்கு ஊதியஉயர்வு இல்லையாம்

ஏ. கோவிந்தசாமி கேள்வி — அமைச்சர் பதில்

சென்னை, ஜுன் 29—

ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஆண்டுதோறும் சப்-இன்ஸ்பெக்டர்கள் புதிதாக சேர்க்கப்படுவதில்லை என்றும், சப்-இன்ஸ்பெக்டர்களுக்குப் பயிற்சியளிக்க வேலூரில் மட்டும் ஓர் பயிற்சி முகாம் உள்ளது என்றும், சப்-இன்ஸ்பெக்டர்களின் ஊதியத்தை உயர்த்தும் நோக்கம் ஏதும் இல்லை என்றும் போலீஸ் இலாகா அமைச்சர் பக்தவத்சலம் சட்டசபையில் தெரிவித்தார்.

'நல்ல அனுபவமும், திறமையும் பெற்ற தலைமை-கான்ஸ்டபிள்களுக்கு சப்-இன்ஸ்பெக்டர் பதவிக்கு உயர்வு தருவதாக அரசாங்கம் வாக்களித்திருந்தது; அதை நடைமுறையில் அரசாங்கம் பின்பற்றி வருகிறதா ?' என்று, தோழர் ஏ. கோவிந்தசாமி அவர்கள் கேள்வி எழுப்பினர்.

★

சிற்றுண்டித் தொழிலாளர் பாதுகாப்புச் சட்டம்

அரசாங்கம் முயற்சிக்கிறதாம்

சென்னை, ஜுன் 29—

சென்னை மாநிலத்திலுள்ள சிற்றுண்டி | உணவு விடுதிகளில் பணியாற்றும் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பளிக்கும் நோக்கத்துடன் சட்டம் உருவாக்கப்படுகிறது என்றும், இதற்காக அரசாங்கம் முயற்சி எடுத்துவருகிறது என்றும், தொழிலாளர் சங்கங்களின் ஆலோசனைகளையும் அரசாங்கம் ஏற்க தயாராக உள்ளது என்றும், தொழில் அமைச்சர் வெங்கட்ராமன் சட்டசபையில் தெரிவித்தார்.

"இந்தச் சட்டத்தைத் தயாரிப்பதற்கு முன்னர், சிற்றுண்டி—உணவு விடுதிகளின் முதலாளிகளையும் அரசாங்கம் கலந்து ஆலோசனை செய்யுமா?'' என்ற கேள்விக்கு அமைச்சர் பதிலளிக்கையில் 'இந்தச் சட்டத்தின் நோக்கமே முதலாளிகளுக்கும், தொழிலாளர்களுக்கும் நன்மை செய்து பாதுகாப்பு அளிப்பதுதான்,' என்று கூறினர்.

★

சேலம் பாக்சைட்

கழக உறுப்பினர்களுக்கு அமைச்சர் பதில்

சென்னை, ஜுன் 1—

''சேலம் மாவட்டத்தில் மேட்டூரில் அலுமினியம் தொழிற்சாலை ஒன்று நிறுவப்படும்'' என்று மாநில தொழில் அமைச்சர் வெங்கட்ராமன் அவர்கள், கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

அது அரசாங்கத்தால், 'நேஷனல் இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷன்' என்ற பெயரில் ஏற்படுத்தப்படுமாம்.

''இதற்குத் தேவைப்படும் பாக்சைட் மூலப் பொருளைத் தோண்டி எடுக்கும் குத்தகை டால்மியா நிறுவனத்திற்கு விடப் பட்டிருக்கிறது; இந்தக் குத்தகையை ரத்து செய்து சென்னை அரசாங்கமே ஏற்று நடத்த வேண்டும் என்று மக்கள் மன்றங்கள் பல கூறி வருகின்றன; அதற்கான யோசனை உண்டா ?''

என்று எம். பி. சுப்பிரமணியம் கேட்டார்.

''அவசிய மேற்பட்டால் குத்தகையை ரத்து செய்து சென்னை அரசாங்கம் ஏற்று நடத்த சட்டம் கொண்டு வரப்படும்''

என்று தொழில் அமைச்சர் வெங்கட்ராமன் பதிலளித்தார்.

இந்த பாக்சைட்டின் தரத்தையும், மற்ற அம்சங்களையும் ஆராய்வதற்கு அதை அமெரிக்காவுக்கு அனுப்பப்பட்டுள்ளது என்றும், ஆராய்ச்சியின் முடிவுகள் கிடைத்த பின்னர் தொழிற்சாலை அமைப்பது பற்றி முடிவு செய்யப்படும் என்றும், வேறு எந்த நாட்டிற்கும் பாக்சைட் அனுப்பப்படவில்லை என்றும், அமைச்சர் தோழர் சுப்பிரமணியத்தின் மற்றொரு கேள்விக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

ஏ. கோவிந்தசாமி :—''இந்த பாக்சைட்டைக் கொண்டு ஒரு அலுமினியம் தொழிற்சாலையை நிறுவ ரஷ்யா உதவிபுரிய முன் வந்ததாக செய்தித் தாள்கள் மூலம் தெரியவந்தது; இதைப் பற்றி அரசாங்கத்திற்கு ஏதாவது தெரியுமா?''

அமைச்சர்:—தெரியாது!

கழகக் கூட்டங்கள்

★

பெரியமதியாக்கூடலூர் :
3—7—57 இரவு 7 மணிக்கு
தி. மு. கழகத் துவக்க விழா
தலைவர் :
கே. எஸ். எஸ். பெரியார்
பேசுவோர் :
ஈ. வெ. கி. சம்பத் எம்.பி.
அன்பில்-தருமலிங்கம்
மு. குழந்தைவேல்
என். இரத்தினம்
எம். கே. கரிகாலன்
பாடல்கள் : பரமத்தி-சண்முகம்

★

மேட்டுநீரேத்தான் :
அழகிரி திடலில்
3—7—57 மாலை 6 மணிக்கு
தலைவர் : பொ. கருப்பையா
பேசுவோர் :
தில்லை-வில்லாளன்
மதுரை-எஸ். முத்து
எஸ். செல்லத்துரை
நெடுஞ்செழியன்
வி. கி. தொந்தி

போக்குவரத்துத் தொழிலாளர் சங்கப் பொதுக்கூட்டம்

''சென்னை சர்க்கார் தீவிர போக்குவரத்துத் தொழிலாளர் பொதுச்சங்கத்தின் சார்பில் 2—7—57 மாலை 6-30 மணியளவில், சங்கத் தலைவர் கி. மனோகரன் தலைமையில் நேப்பியர் பார்க் மைதானத்தில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெறும்.

''தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி எம்.எல்.ஏ., தோழியர் சத்தியவாணிமுத்து எம்.எல். ஏ., டாக்டர் சி. ஆர். கிருஷ்ண பிள்ளை (சங்கத் துணைத் தலைவர்) ஆகியோர் பேசுவர்.

''தொழிலாளர்கள், அனைவரும் பெருவாரியாகக் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்'' என்று, சங்கச் செயலாளர் அறிவிக்கிறார்.

சென்னை மாவட்ட தி. மு. கழகக் கிளை நிர்வாகிகளுக்கு

''7—7—57' அன்றைய நிகழ்ச்சி பற்றி ஆலோசிக்க, இன்று (1—7—57) மாலை 6-30 மணிக்கு, 'அறிவக'த்தில் கூடவிருக்கும் அவசர ஆலோசனைக் கூட்டத்திற்கு கிளைச் செயலாளர்கள் —பிரதிநிதிகள் தவறாது கலந்து கொள்ள வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்''

என்று, சென்னை மாவட்ட தி.மு. கழகத் துணைச் செயலாளர் தோழர் கோ. செங்குட்டுவன் அறிவிக்கிறார்.

சென்னை வரவு-செலவுத் திட்டம்

அபிவிருத்தித் திட்டங்கள் பற்றி ஒரு கண்ணோட்டம்

சென்னை, ஜுலை 1—

நடப்பு ஆண்டில், தமிழ் மாநில சர்க்கார் நிறைவேற்ற இருக்கும் திட்டங்கள் பலவற்றிற்கு ஒதுக்கியுள்ள தொகைகள் பற்றிய விவரம் வரவு-செலவுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது; அதன் சுருக்கம் இங்கு தரப்படுகிறது :—

வரவு—செலவுத் திட்டம் திருத்தி அமைப்பட்டதேன்?

'வருவாய் இனங்களில் ஏற்பட்டுள்ள மாறுதல்களுக்கு ஏற்பவும், ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் எடுத்துக்கொண்டுள்ள புதிய பணிகளுக்காகவும், சமீபத்தில் குறைந்த ஊதியம் பெறும் அரசாங்க ஊழியர்களுக்காக அளிக்கப்பட்டிருக்கும் சில சலுகைகள் காரணமாகவும், சென்னை அரசாங்க வரவு-செலவுத் திட்டம் திருத்தி அமைக்கப்பட்டிருக்கிறது.

புதிய பஸ்கள் வாங்க ரூ. 20 இலட்சம்

சென்னை நகரத்திலும், கன்னியாகுமரி மாவட்டத்திலும் பஸ் போக்குவரத்தை அரசாங்கம் நடத்திவருகிறது. இதன் அபிவிருத்திக்காக 1957—58-ம் ஆண்டிற்கான சென்னை அரசாங்க வரவு-செலவுத் திட்டத்தில் ரூ 20 இலட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

புதிய பஸ்கள் வாங்கவும், போக்குவரத்துத் தொழிற்சாலையை அபிவிருத்தி செய்யவும், இந்த நிதி பயன்படுத்தப்படும்.

விவசாய உற்பத்தியை அதிகரிக்கத் திட்டம்

விவசாய உற்பத்தியை அதிகப்படுத்த 360 விதைப் பண்ணைகள் ஏற்படுத்துவது முக்கிய அம்சமாகும்; இவ்வாண்டிலேயே 136 பண்ணைகள் ஆரம்பிக்க ரூ. 49 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

இரசாயன உர உபயோகம் நாளுக்கு நாள் அதிகரித்துவருகிறது. இதுவரையில் 20,000 டன் அம்மோனியம் சல்பேட் வழங்கப்பட்டிருக்கிறது; இவ்வாண்டில் இவ்வெண்ணிக்கை 1,40,000 டன்னாக உயரும்; இதற்காக குறுகிய தவணையில் கடன் தர ரூ. 70 இலட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

பூச்சிகளையும், நோய்களையும் தடுப்பதற்கு ரூ. 4,60,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

நீர்ப்பாசனத்திற்காக மொத்தம் ரூ. 234 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

நிலங்களின் மண் வளத்தைப் பாதுகாக்க மொத்தம் ரூ. 32 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

கால்நடைகள் பராமரிப்பு

சென்னை மாநிலத்தில் சில கிராமங்களில் நல்ல ரக பொலி காளைகளை வைக்கவும், செயற்கைக் கருமுறையைப் பின்பற்றவும், செங்கன்றுகளைப் பாதுகாக்கவும், பால் பண்ணை ஏற்படுத்தவும் ரூ. 16 இலட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

ரூ. 1¼ கோடி செலவில் வகுக்கப்பட்டுள்ள சென்னை நகர பால் பண்ணையின் அபிவிருத்தியின் பல்வேறு திட்டங்களுக்காக ரூ. 28 இலட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

கோழிகளின் வளர்ச்சிக்காக வெளிநாடுகளிலிருந்து சாதிகுஞ்சுகளை இறக்குமதிசெய்து, கோழிப் பண்ணைகள் ஏற்படுத்தும் திட்டத்திற்காக ரூ. 3,30,000 ஒதுக்கப்பட்டிருக்கிறது.

தேசீய நலப் பரப்புத் திட்டம்

133 தேசீய நலப் பரப்பு வட்டாரங்களுக்கு ரூ. 3 கோடியே 70 இலட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

மீன் பிடிப்புத் தொழில்

ஆறு, குளம், கடல் இவைகளில் மீன் பிடிப்புத் தொழில் அபிவிருத்தித் திட்டங்கள் ரூ. 14 இலட்சம் செலவில் நடைபெறும். மீனவர்கள் ஆழ்கடலில் வெகுதூரம் சென்று மீன்பிடிக்க ரூ. 2½ இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

மின்சாரத் திட்டம்

கடந்த ஆண்டில் கிராமாந்திர மின்சாரத் திட்டங்களின் கீழ் சென்னை மாநிலத்தில் 1,300 கிராமங்களுக்கும், 13,000 தண்ணீர் இறைப்பு குழாய்களுக்கும் மின்சாரம் வழங்கப்பட்டுள்ளதாம்.

இந்த ஆண்டில் மின்சார அபிவிருத்திக்காக ரூ. 11 கோடியே 62 இலட்சம் ஒதுக்கியுள்ளது.

குந்தா திட்டத்திற்கு கனடா அரசாங்கம் பெரிய இயந்திரங்களை வெளிநாட்டு உதவித் திட்டத்தின் கீழ் தர முன்வந்துள்ளதாம்.

பெருந் தொழில்களில் முதலீடு

பெரிய தொழில்கள் துவங்கப்படும்போது, அவைகளின் சென்னை அரசாங்கமும் பங்கு கொள்ள ரூ. 15 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

சிறு ரகத் தொழில்களுக்கு ரூ. 25 இலட்சம் உதவி

சிறு ரகத் தொழில்களுக்கு உதவியளிக்க ரூ. 25 இலட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. மானியமாக ரூ. 112 இலட்சம் இந்தத் திட்டத்தின்கீழ் கோரப்படும்.

தொழிலாளர்களுக்குக் குடியிருப்பு வசதிகள்

தொழிலாளர்களுக்குக் குடியிருப்பு வசதி செய்ய அரசாங்கத்தரால் உதவியளிக்கும் திட்டத்தின்கீழ் தனியார் துறைக்கு ரூ. 12½ இலட்சமும், கூட்டுறவு சங்கங்களுக்கு ரூ. 3 இலட்சமும் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

வீடு கட்டும் சங்கங்களுக்குக் கடன் கொடுக்க ரூ. 37 இலட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

புதிய சாலைகள் அமைக்க

இந்த ஆண்டில் மாநிலத்தின் புதிய சாலை அமைப்புக்காக 102 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

சேரிப் பகுதிகளைத் திருத்தி அமைக்க

சென்னை நகரில் சேரிப் பகுதிகளைத் திருத்தியமைப்பதற்காக தனியாக ரூ. 20 இலட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

தாழ்த்தப்பட்டோர் நலனுக்காக !

சென்ற ஆண்டில் ரூ. 134 இலட்சம் தாழ்த்தப்பட்டவர்களின் நலனுக்காகச் செலவிடப்பட்டுள்ளது; இந்த ஆண்டில் ரூ. 194 இலட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

சென்னை—8-வதுவட்ட தி. மு. கழகச் செயற்குழு உறுப்பினர்களுக்கு :

2—7—57 இரவு 7-மணிக்கு, சென்னை முத்துகிருஷ்ணன் தெரு, எண் 28-இல்லத்தில் மேற்படி செயற்குழுக் கூட்டம் நடைபெறும் ; அதுபோது முக்கிய பொருள்கள் ஆய்வுக்குவரும்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24: சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர் : இரா நெடுஞ்செழியன் எம்.ஏ